1st September 1970]

வருகிற எங்களுக்கு அந்த வேலே பெறுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடும் என்று எதிர்ப்பு தெரிவித்ததன் பேரில், அப்படிப் புதிதாக வருகிறவர்களுக்கு வேலே அளிக்க வேண்டியிருக்கிற காரணத்தால், டிப்ளமா இதற்கென்று பெற்றவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டுமென்பதால், இந்த விண்ணப்பங்கள் கருத்தில் கொள்ளப்படவில்லே.

Free Reading Room for women and children

*65. *Q.*—THIRU T. K. SUBBIAH : Will the Hon. the Minister for Education and Health be pleased to state the present stage of the construction of the building for Free Reading Room for women and children at Anaikulam Ground, Singara Thoppu, Tiruchi town by the Tiruchi District Local Library Authority, for which foundation-stone was laid by the Prime Minister in 1966 ?

மாதர், குழந்தைகள் இலவச படிப்பக கட்டிடம்

திரு. டி. கே. சுப்பையா : மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விஞவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

திருச்சி மாவட்ட நூலக ஆணைக் குழுவினரால் திருச்சி நகரத்தில் சிங்காரத் தோப்பு, ஆனைக்குளம் மைதானத்தில் மாதர், குழந்தைகள் இலவச படிப்பக கட்டிடம் கட்ட 1966-ஆம் ஆண்டு பிரதமர் அவர்களால் கால்கோள் போட்டது, தற்போது எந்நிலேயில் உள்ளது ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தொடக்கத்தில் நூலகத்தை கட்டவேண்டுமென்ற இடத்தை பின்பு திருச்சி மாவட்ட நூலக ஆணைக் குழு, மேற்கு போலிவார்டு சாலேயிலுள்ள இப்ராஹிம் பூங்கா என்னும் இடத்துடன் பரிவர்த்தனே செய்து கொள்ள வேண்டுமென நினேத்ததால் நூலக கட்டிட வேலே இன்னும் ஆரம்பிக்கப்படவில்லே. திருச்சி நகரவையின் தீர்மானம் இதுவரை தெரியவில்லே.

திரு. டி. கே. சுப்பையா : ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஆனேக் குளம் மைதானத்தை மாற்ற வேண்டிய அவசியம் என்ன ? அப்படி மாற்றிஞல். அந்த இடத்தை என்ன செய்ய முடிவு செய்யப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : சிங்காரத் தோப்பு என்ற இடத்தில் 33 சென்ட் இடத்தைப் பெற்ருர்கள். அந்த இடத்தில் 5 லட்சம் ரூபாய் செலவில் கட்டிடம் கட்ட இருந்தார்கள். ஆஞல் அதைவிட்டு மேல் போலிவார்டு ரோடில் இப்ராகிம் பார்க்கில் இந்தக் கட்டிடம் கட்டப்பட்டால், அந்த இடம் மிகவும் வசதியாகவும் தகுதியாகவும் இருக்கும் என்று நகரசபையை அணுகிஞர்கள். அந்த இடத்தை நகரசபை தந்து விட்டால், அதே அளவுக்கு வேறு இடத்தை அதற்குப் பதிலாகத் தந்து விடுகிருேம் என்று சொன்ஞர்கள். 33 சென்ட் நிலத்தை இங்கே தந்துவிட்டால், இங்கே கட்டுகிற கட்டிடம் பொதுவான இடத்திலும் பார்வையான இடத்திலும் இருக்கும் என்ற அடிப்படையில் தான், அந்த இடத்தை மாற்ற வேண்டுமென்று நூலக ஆணைக்குழுத் தலேவர் அவர்கள் கேட்டிருக்கிருர்கள். இது குறித்து நகர சபையின் தலேவருடைய இசைவு எதிர்பார்க்கப்படுகிறது.

[1st September 1970

THIRU D. SANTOSHAM : Sir, I find from the question that the building to be constructed is for a Free Reading Room for Women and Children and that men are to be precluded from entering into this Reading Room. If so, what is the reason for keeping this Reading Room reserved for women and children only ? Are there any other Reading Rooms of this nature ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : இந்த இடத்திலிருந்து அந்த இடத்திற்கு மாற்ற வேண்டுமென்று தலைவர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். நகர சபையின் இசைவு எதிர்பார்க்கப்படுகிறது என்று தான் இங்கே குறிப்பிருக்கிறது.

THIRU D. SANTOSHAM : My question was : Are men precluded from entering into this Reading Room ? Are men not supposed to be entering into this Reading Room ? If so, what is the reason ? Are there similar Reading Rooms in this State ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் என்றிருப்பதால் அவர்களுக்கு மட்டும் தான் என்று நாம் கொள்ளவேண்டியிருக்கிறது. ஆனால் அதுபற்றிய சரியான தகவல் இப்போது இல்லை.

திரு. டி. கே. சுப்பையா : நூலக ஆணைக் குழுவின் சேர்மனாக தற்போது யாரும் இல்லை. யார் நூலக ஆணைக் குழுவின் தலைவராக இருந்தபோது இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : இதற்கு முன்னால் இருந்த நூலக ஆணைக் குழுத் தலைவர் காலத்தில். புதிய தலைவர் இன்னும் நியமிக்கப்படவில்லை. ஏற்கெனவே இருந்த தலைவர் காலத்தில் தான் இது தீர்மானிக்கப்பட்டது. யார் என்று எனக்குத் தெரியவில்லை.

Sugar Factories

*66. *Q.*—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether it is a fact that the Government have decided to commission three more Sugar Factories in the State ; and

(*b*) if so, the necessity for the same ?

சர்க்கரை ஆலைகள்

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) இம்மாநிலத்தில், மேலும் மூன்று சர்க்கரை ஆலைகளைத் தொடங்க அரசு கருதியுள்ளதென்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்கான அவசியம் யாது ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) ஆம்.

(இ) நமது மாநிலத்தின் வளர்ச்சிக்காக.